உ

சண்முகநாதன்

SANMUKANATHAN.

பத்திரவிகிதம்
உள்ளூருக்கு ௵-க்கு ரூ 1-50
வெளியூருக்கு ௵-க்கு ரூபா 2
தேசவோப்பகுதிக்கு
௵-க்கு 2 50
தனிப்பிரதி சதம் 8

மாசமிருமுறை சுக்கிரவாரம் பிரகடனமாகும்.

செறிவறிந்துசீர்மைபயக்கு மறிவறிந் தாற்றினடங்கப் பெறின்.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு— ரூ. ச.
ஒருகலத்துக்கு 7-50
அரைக்கலத்துக்கு 4-00
கால்கலத்துக்கு 2-60
வரி 1-க்கு 0 8
அடுத்தமுறைக்கு டிெ அரைவாசி

மலர் ௨ } யாழ்ப்பாணம், பரிதாபி ௵ ஆனி ௴ ௨௯. (12-7-12) { இதழ் — ௫

உ

குகமயம்.

அருவமுமுருவமாகி யநாதியாய்ப் பலவாயொன்றாய்ப், பிரமமாய் நின்றசோதிப்பிழம்பதோர் மேனியாகக், கருணைகூர்முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே, ஒருதிருமுருகன்வந்தாங் குதித்தன னுலகமுய்ய.

சகலத்தன் சால்பினுறுஞ் சண்முகநாதனைப்பெயரா, டிங்களிருமுறைதந்தி மெக்காலு—மொக்கமுடன், உணர்வின்னிலை யுய்த்திறந்தம் பல்கிட, வன்னவன்குளே துணையாம்.

நம் பத்திரிகையின்

போஷகர்கள்.

ஸ்ரீமாந் நா. இராமலிங்கம்
பிரபலவைத்தியர்.
" த. இராமநாயபி (வியாபாரம்)
" நா. சின்னத்தம்பி
பிரபலவைத்தியர்.

இன்னும், இப்புண்ணிய புருஷர்களைப் போலச் சைவாபிமானிகள் உதவி புரிவார்களாயில் பத்திரிகை தளர்வுறாது நடக்கு மென்பது [illegible].

சண்முகநாதன்

யாழ்ப்பாணம் பரிதாபி ௵ ஆனி ௴ ௨௯.

சண்முகநாதன் திருவருள் விலாசம்.

முட்டை

—(௧)—

சண்முகநாதனுக்கு "முட்டை" என்னும் பெயர் வந்தகாரணம். சிவபெருமான் ஒருவரையே யன்றி வேறெவரையும் பாடாத சிவகவி யெனப்படும் புலவர் ஒருவர் இருந்தார். அவர்சோழதேசத்திலுள்ள சைவ வேளாளர். அவருக்குப் "பொய்யாமொழி" யென்னும் பிறிது பெயருமுண்டு. ஒருநாள் ஒரு சுப்பிரமணிய தொண்டர் அவரிடஞ்சென்று "கந்தன்மீது ஒரு பிரபந்தம் பாடல்வேண்டு"மென்று கேட்கப் பொய்யாமொழியாகிய அச்சிவகவி, "ஓ! நான் சிவனையன்றிப் பிறரை மறந்தும் பாடேன் சிவனுடைய சேவலுக்கு முருகன் ஒரு குஞ்சு போன்றவன். அவனை நான் பாடேன்" என்றார். அது கேட்ட சுப்பிரமணிய தொண்டர் மனமிக வருந்தி ஐயா! வே அங்ஙனமாயின் நான் கோழிக்குஞ்சுக்கும் பாடுவேன் கூழுக்கும் பாடுவேன்" என்று முருகப்பிரான் சந்நிதியிற் போயழுது புலம்பி முறையிட முருகப்பிரானார் அச்சிவகவியின் அகங்காரத்தைப் போக்கத் திருவுளங்கொண்டு அவருக்கு வறுமை மேலிடச் செய்தருளினர். சிவகவியும் வறுமையினால் மிக நலிந்து அக்காலத்திலே தஞ்சாவூரிலரசுபுரிந்த சந்திர வாணன் என்னும் அரசனைக் கோவையாற் புகழ்ந்து பாடி யரங்கேற்ற அரசனும் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு தேங்காயளவு பொன் கொடுத்து மேலும் வேண்டுவன உதவி யுபசரிக்க அவற்றைப் பெற்றுக் கொண்டு வழிநடந்து வரும்பொழுது மானிட சஞ்சார மில்லாத பெருங்காட்டுவழி கடக்கவேண்டி யிருந்தது அக்காட்டில் நடக்கும்பொழுது, சண்முகநாதன் திருக்கரத்திலே வில்லும் வேலும் அம்புங்கொண்டு வேடராக வந்து எதிர்த்தார். அது கண்ட புலவர் "சிவனே உன்னையன்றி வேறெவரையும் பாடாத விரதமுடைய நான் இன்று மனிதனைப் பாடிப் பொருள் பெற்ற குற்றத்திற்காகத் தான் இந்தஆபத்தில் விட்டனையோ?" என்று நடுங்கி நிற்க வேடர் எதிர்த்து அடா, பயலே, நில்லு. நீயாவன், என்ன. "நான் புலவன்" என்றார், வேடர் சிரித்துக் கொண்டு அடா, நீயா புலவன்? புலவனென்ற பெயர் எங்கள் தெய்வமாகிய முருகனுக்குள்ளது, உனக்கென்ன விதமாய்வரும்? ஒருபோது முருகன் சீடனாகிய அகத்தியனுக்கும் செல்லும். நீயும் புலவன் என்பது ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் உனக்குப் பாட்டுப்பாடத்தெரியுமோ? என்றார் அது கேட்ட புலவர் "இவன் நமது பொருளைத்தான் கவர்வான் உயிரைக் கவரமாட்டான்" என மனந்தேறி உன் பெயர் என்ன? என்றார், என் பெயரா; என் பெயர் முட்டை இந்த முட்டையும், இந்த நிலமும் ஆகாசமும் போக்குந் துறையும் பொருந்தா பொன்போல்" என்று தொடங்கி யொரு வெண்பா பாடுபார்ப்போம்" என்றார் சண்முகநாதன். உடனே புலவர்.

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே, யென்பேதைசெல்லற்கிசைந்தனளோ—மின்போலு, மானவேன் முட்டைக்கு மாறுபதெவ்வர் போங், கானவேன் முட்டைக்குஞ் சாடு.', எனப்பாடினர்• உடனே முட்டையார் உடல்குலுங்கச் சிரித்து "உன்பாட்டிற் பிழை யிருக்கிறது சதுரக் கள்ளியும் சாம்பராய் வேகக்கூடிய பெருநெருப்பெரிகின்ற இந்தக் காட்டிலே சிறுநெருப்பிலும் சாம்பராகக் கூடிய வேலமரத்தின் முட்டிடந்து தைப்பதெப்படி? ஆதலால் நீ பொய்யாமொழிப் புலவனல்லை. பொய்யே மொழிப் புலவனுமில்லை, இனி நான் ஒரு கவி சொல்லுகிறேன் அதிற் பிழை யிருந்தாற் சொல்லு பார்ப்போம். அக்கவியில் இந்நிலவர் [illegible], உரிப்பெயராம உன்பெயரும் இரண்டுமுறையும் பொருந்துவ தன்றி, நீ [illegible] பாடுவேன் என்ற [illegible] "விழுந்ததுளி யந்தரத்தே வேமென் றெழுந்து விழி நெழுந்து சுடர் சுடுமென்று—செழுங் கொண்டல், பெய்யாத கானகத்திற் பெய்வினையுஞ் சென்றனனே, பொய்யா மொழி பகைஞர் போல்', என்னும் வெண்பாவைக்கூறி. நீயா நானு பொய்யாமொழிப் புலவன் என்றமை கேட்டுப் புலவன் திகிலடைந்து வேடரை வணங்கினார் வேடரும், புலவனே, கோழியைப் பாடிய வாயாற் குஞ்சைப் பாடேன்" என்று நீ முன்னொருநாற் சொன்னது மறந்தனையோ? கோழியினும் குஞ்சினும் முட்டை பெரிதாயிற்றே? என்று தம் திருவுருவைக் காட்டி யருளிக் கூறுவாராயினர்!! புலவனே, சிவனும் யாமும் வேறல்லேம். அவரையும் எம்மையும் பிதாப் பிள்ளை யென்று புராணங்கள் கூறுவ துபசாரம். உனக்குச் சித்தாந்த வுணர்ச்சி யில்லை. அகத்தியன் பாற் சென்று சித்தாந்த வுண்மை யறிந்துய்தி யெனப் பணித்து மறைந்தார். புலவர் அகத்தியரிடம் சித்தாந்த மறிந் துய்ந்தார். குஞ்சைப் பாடேன் என்ற புலவரைப் பொய்யாக்கும் வண்ணம் வேடராய் வந்து முட்டை யென்று பாடுவித்த படியால் சண்முகநாதன் முட்டை யென்னும் திருநாமம் பெற்றனர். சுபம்

இந்தியரின் இசைக் கருவி.

—(௫)—

மக்கட் டொகுதியின் ஒடுங்கிய அறிவை விளக்க வித்தற் கின்றி யமையாது வேண்டப்படுவனவாகிய அறிவுநூற் கேள்விகளைச் செவிக்கருவி துணைகொண்டே அறியக்கிடத்தலின் ஏனைப் புலன்களிலும் செவிப் புலஞ் சிறந்த தென்க. "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம், செல்வத்து ளெல்லாந் தலை" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும். இச்செல்வம் ஆறறிவுள்ள மக்கட்கே யன்றி அறிவிற் குறைந்த விலங்குப்பறவை முதலிய வற்றிற்கும் உறுதியோடு வகையும் தருவதாகும். எல்லா வுயிர்களையும் மகிழ்விக்கும் பொருள் இசையுங் கருவியுமாம். இசை தனித்துப் பயிலுங் காலும் இனிமையினும் கருவியோடு சேர்த்துப் பயிலுங் காலும் இனிமை சர்க்கரைப் பந்தரிற் றேன்மாரி பெய்ததுபோல் மிக்க இனிமையா யிருக்கும்.

தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி, என இசைக்கருவி ஐவகைப்படும், இவற்றுட் டுளைக்கருவியும் நரம்புக்கருவியுமே இனிமை பயத்தலிற் றன்மை வகித்தன அவை குழல் யாழ் என்பன. இவை நமதிகபரசுகங்கட் கின்றி யாதன வென்பதை விளக்க வன்றே கலைகட்கெல்லாந் தலைவியாகிய நாமகள் தன்றிருக்கரத்தி யாழேந்தியதும், காவற்கடவு ளாங் கண்ணன் குழல் தாங்கியதும், முருகக்கடவுள் "கோடியம்பியும். வேயங் குழலூதியும், குரலாவிடு தந்திரி யியக்கியும், ஏழிசை நிறுத்துப் பாடியும், சிறு பல்லியத்தின் னிசை பயின்றதும். நடராச வள்ளலார், நாதமயமான உடுக்கை யேந்தியதும், தட்சணாமூர்த்தமா யமர்ந்து யாழ்தாங்கியதும், நம் போலிகள் இருமை யின்பமும் பெற்றிடேறற் கேற்ற கருவியிவை யாமெனக் காட்டிய தூஉ மென்க.

நஞ்சையுடைய பாம்புகளும் குழலிசையின் மயங்கிப் பிறர்வசப் படுகின்றன பறைபட வாழாஅ சுணமாவும் இசைபாடவு வந்துவாழும் மதம்பிடித்த யானை யாழிசையின் மயங்கி வசப்படு மென்பது, "தாழ்வரை நிவலாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு" என்னும் பாலைக் கலியினாலும், "வேழத்தின் வெந்தொழில் வியக் கருணைவீணை காமுறத் தழீஇ" என்னும் ஞானாமிர்தத்தாலும் "இசையினி லிவட்குத் தோற்றும் யானையால் வேறு மென்னி-னிசைவ தொன்றன்று கண்டார்" என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளாலும்பிறவற்றாலுமறியப்படும்,

ஏழிசையாய் இசைப்பயனாயு முள்ள கடவுளும் தமக்குச் செய்யும் ஏனைய வழிபாடு களினும் இசைபாடலையே மேலாக ஏற்றருளுவர் என்பதை "அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடாமருளுமாறே" எனபதனாலறிக. கண்ணுதலார் தங்கைலையை யெடுத்த அரக்கனை விரலா லடர்த்த ஞான்று அவனுய்யும் வழியறியாது மெய்துயிர்த்து கையும் காலுந்துக் கோல வாளொடு நீணாளுங்கொள்ளும்படி யவர் திருவுளத்தைக் கனிவித்தது அவனிசைத்த ஏழிசை நிறைந்த யாழிசை யன்றோ?! தும்புரு நாரதர் என்ன பணி செய்து என்ன பதம் பெற்றனர்? பரமபதியாரது திருநடமுறைக்கேற்பக் குடமுழ விரட்டிய அருமையா லன்றோ பாணாசுரன பெருமையடைந்தனன்? இடையர் குலத்தினரான ஆனாயநாயனார் இசைத்த குழலிசைக்கு நுகியன்றோ வுமையொடு சிவபிரான் திருவருள் புரிந்தார். அன்றியும், கருணைக் கடலாகிய கடவுள் பல்லுயிரும் பேரின்படைந்துய்யுமாறு தாமருளிய நால்வேதத்துள் இசைமயமான சாமவேதத்தின் உபவேதமாயதும் எல்லாக்கடவுளர்க்கும் உவகையைச்செய்யும் இசைமுதலியவற்றையுணர்விப்பதுமாய காந்தர்வவேதத்தையருளிச்செய்தவாறே புலவராய்க்கழகத்தமர்ந்து தமிழாராய்ந்து இயல்இசைநாடகமெனத் தமிழைமுத்திறந்தருளினர். இசைத்தமிழுக் கிலக்கியமாவுள்ளது முத்தமிழ்விரகராம் மூவர்செய்பனுவலே. "நமக்குமன்பிற்பெருகிய சிறப்பின்மிக்க-அர்ச்சனை பாட்டேயாகு மாதலால் மண்மேனம்மைச்சொற்றமிழ்பாடுகென்றும்," "பொற்றாளம் முதலிய வருளியும், இசை பரவும் படி அடியார்க்கருத்திருவருள் புரிந்தவர் சிவபெருமானே. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்பாடியருளியதேவாரங்களைத் தமயாழிலமைத்து வாசித்து யாவரையும் மகிழ்வித்தவர் திருநீலகண்டயாழ்ப்பாணரென்பது யாவருமறிவர். தேவாராதிகளை வாளா படிப்பதிலும் பண்ணோடும் இசையோடும்படித்தல்மிகநன்று- இதுபற்றியன்றோ "மூவர்செய்பனுவலனுபகாரமோ இசையுமில்லை" என்று இரங்குவாராயினர் நந்தாயுமானவர். ஆதலின்.

நமதிலங்கைவாசிகளே! இந்துக்களே இக்காலத்து மலிந்தனவும் சிலாதார மற்றனவுமாகிய அயல் நாட்டு வாத்தியங்களையொழித்து நம்பூர்வீகமானதும் சிலாதார முள்ளதும் சாஸ்திரயுக்தமானதுமான இசைக் கருவியைப் பயிலத் தொடங்குங்கள். பாருங்கள் நமதிறைவனையிசையான்மகிழ்வித்த இராவணன்எமதிலங்கைவாசியன்றோ; பாண்டியராசன சபைக்கு இசைவாதுவெல்லச்சென்ற பாடினி நம்மீழதேசத்தாளன்றோ; நமதுநாட்டுக்குயாழ்ப்பாணமென்ற பெயர்வந்தகாரணந்தானென்ன? யாழ்த்திறமையன்றோ? இவ்வாறெல்லாமிருப்ப பேரானிற்கணணாயிரம்பிள்ளை தாண்வராய பிள்ளையெனறும், காரியத்திற் குருடும் முடமுமாயிருத்தல்போலல்லவா! இருக்கிறதெங்கள்பாடு. ௨௰ ரூ. தொடக்கம் ௧00 ரூ.க்குள் பெறக்கூடிய எங்கள்யாழ்வகையையும், மீ ௨0 ரூ வேதனம் பெற்றுக் கற்பிக்கும் இசை யாசிரியரையும் விட்டு ௫00-௧000-௨000 ரூ விலைகொடுத்து மாசம் ௧௫க்கு ௫0-௭௫-௧00 ரூ வேதனங்கொடுத்து அன்னியவாத்தியங்களைப்பயில்வது கையில்வெண்ணெயிருக்க நெய்க்கலைவதுபோலல்லவா? இருக்கிறது. ஒருவேளை அந்த இந்தியவாத்தியங்களிங்கேயார்செய்கிறது இந்தநாளையிலது இல்லையெனபீர்கள்போலும் தஞ்சாவூர் மைசூர்முதலியவிடங்களிற்பல்லாயிரம் மலிந்துகிடக்கின்றன- நீங்கள் விரும்பிக்கொள்ளமுயனுல் உங்களுக்கு விற்றற்பொருட்டுஅநேகமாயிரம்செய்துபோடுவார்கள்- ஆதலின் நமதிந்தியரி னிசைக்கருவியைப்பயினறு நாம்முனவருவதோடு நந்தேயத்தையும் முன கொணர்வேமாக.

விசேஷ விளமபரம்-

எங்கள், சண்முகநாதனிற்பேரபிமான முள்ள வரும் போஷகரிலொருவருமான ஸ்ரீ. த. இளையதம்பியவர்கள் முல்லைத்தீவு திரிகோணமலை யாகிய விடங்களிற் பத்திராபிமானிகளைச் சந்திக்க வெளிப்பட்டிருத்தலால் பத்திராபிமானிகள்தங்கள்கையொப்பப் பணத்தைக கொடுத்துப் பற்றிச்சீட்டுப் பெற்றுக்கொள்வதோடு, பத்திரிகையிற் குறித்த வேறெவ்விதகருமங்களையும் ஷை தம்பி யவர்களிடத்தே தானே ஒழுங்கு பண்ணும்படிவேண்டு கின்றேம்.

மானேசர்

சமாசாரங்கள்.

காலநிலை—வெயி லதிகம் காற்றுக் குறைவு அகவிலை வர வர மிக விலையேறுகின்றது.

சப்பிறீங்கோடு—இலங்கைச் சிரேட்ட நீதிபதி கனம் ஹட்டென்றன் அவர்களே இந்த மீ ௮-ந் திகதி திங்கட் கிழமை தொடக்கமாக இவ்வருட இரண்டாம்முறைச்சப்பிறீங்கோட்டுவிசாரணை நடத்தி வருகிறார்கள் இதற்கு முடிப்புறத்தப்புக் காத்து, மெஸ். ஒபய சேகர. துவிபாஷிகர் மெஸ். சி. பிறக்றர், இம்முறை பாரப் படுத்தப்பட்ட வழக்குகள் யாழ்ப்பாணத்தி லிருந்து ஆறும், பருத்தித் துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு களிலிருந்து நான்கு மாகப் பத்து இவற்றுள் முதலா வதாக கொக்குவில் மிஷன் பெண்பாட சாலை யாசிரியர் த. சுப்பிரமணியமும், அல்லூர் கா. முத்துவும் அப் பாடசாலையிற் கற்ற பாராய மற்ற சிறுமியைப் பலவந்தஞ் செய்த வழக்கு விளங்கப் பட்டு உபாத்தியாயருக்கு ௩இ. வருடக் கடுங்காவலும், கூட்டாளிக்கு ௩, வருடக் கடுங்காவலும் விதிக்கப் பட்டது. இவ்வழக்கில் முன் பின் மாறு படச் சாட்சி சொல்லிய அல்லூர்க் கம்மாளத் தப்பிக்கும் ஒரு மாச மறியல். ௨ வதாக, முல்லைத்தீவு மனைவியைக் கொன்ற வழக்கு. இதில் எதிரி குற்றத்தையொப்புக் கொண்ட படியால் கை பிழைபாட்டுக் குற்றத்திற்கு ௨. வருட மறியல் பெற்றுன்.

௩ வதாக, நெடுந்தீவுக் கொலை வழக்கு—இதில் எதிரிகளிருவரில் ஒருவர் விடுதலை யடைய மற்றவர் ௨0 வருடச் சிறைத் தீர்ப்புப் பெற்றனர். முன்னொடு பின் மாறுபடச் சாட்சி சொன்ன சிறுவனொருவனுக்குப் பத்தடியுங் கிடைத்தது.

௪-வதாக, மாதகல் கொலை வழக்கும் பச்சிலைப் பளையில் வழக்கும் விளங்கப்பட்டு மாதகல் வழக்கில் எதிரிகள் விடுதலை யடைந்தனர். பச்சிலைப்பளை வழக்கில் எதிரிகள் விடுதலை யடைய சாட்சிக்காரன் ௩ மாசச் சிறை பெற்றான்,

௬ வதாக, கல்லுண்டாய் வெளியிற் குதிரை வண்டியால் நெரித்துக் கொன்ற வழக்கு விளங்கப் பட்டு வண்டி யோட்டிய கள்வனுக்குப் பதினெட்டு மாச மறியல் கிடைத்தது.

௭ வதாக, அரியாலை மசுவாத வழக்கு விளக்கம நடந்து கொண் டிருக்கிறது.

உயர் தரக்கல்வி—சரஸ்வதி கலாவிருத்திச் சங்கத்தின் வருஷாந்தக் கூட்டத்தில் அக்கிராசனம வகித்த கௌரவ ஸ்ரீமான் பொ. இராமநாதன் துரையவர்கள் "உயர்தரக் கல்வி" என்னும் விஷயத்தைப் பற்றி நீண்ட பிரசாரணஞ் செய்தார்கள்.

* * *

மெடினு—எங்கள் காருண்ணிய சக்கிர வர்த்தி யாரையும் சக்கர வர்த்தினி யாரையும் இந்தியாவுக் கேற்றிச் சென்ற "மெடினு" என்னுங்கப்பல் இந்த மீ ௨0 உ கொழும்புக்கு வருமென்று எதிர்பாத் திருக்கப் படுகின்றது.

தொடாமுறி வழக்கு—டக்டர். ஸ்ரீ ஏ. கே. குமாரசுவாமி யவர்கள் இங்கிலாந்தில் ஹைகோட்டில் தம் மனைவி மேல் தொடா முறி வழக்குத் தொடுத் திருக் கின்றனர்.

ஆற்றுப் பிரவாகம்—இந்த மீ 9 திகதி இரவு முழுதும் பெய்தமழையினுலே கம்பளையையும் அதனடுத்த நாடுகளையும் மகாவலிகங்கைப் பிரவாகம் மூடிக்கொண்டது மேல்வீடுள்ளவர்கள் அங்கே யேறியும் தோணிமூலமாகத் தான் தப்பிக்கொண்டார்கள். மலைநாடுகளிலுள்ள இருப்புப் பாதைகளெல்லாம் ௩. அடி நீருளமிழ்ந்திக் கிடக்கின்றன. தியத்தலாவைக்குத் தேசாதிபதியவர்களை யேற்றிச் சென்ற வண்டியுந் தடைபட்டது. இவ்வித பிரவாக முன்னெருபோது மில்லையாம் ஆனால், ௧0-ந் திகதி வரையில் வெள்ளம் சிறிது வடியத் தொடங்குகிறதாம்.

சேர்க்கஸ்—புறேக்கியர்வெஸ்ரேன் சர்க்கஸ் சமீபத்தில் யாழ்ப்பாணம் வருகிறதாக விளம்பரம் பறக்கிறது. உகிர்ச் சுற்றின்மேல் உலக்கை விழுந்ததுபோல பஞ்சம்பிடித்திருக்கும் இவ்வேளையில் இவர்களும் வந்து தொல்லைப்படுத்த வேண்டியது கால கதிதான் போலும்.

விருதுகள்—யாழ்ப்பாணச் சாமான்களுக்காகப் பொன் விருதும், புகையிலைக்கு ஒரு பொற் பதக்கமும், செம் பாட்டு மாம்பழம் தும்புக்கட்டு. குடி புகையிலை, தின்னுகிற புகையிலை- யாழ்ப்பாணத்தில் நெசவு பண்ணிய ௬ வகைசசீலைகளுக்குத் தனித்தனி, வெள்ளிப் பதக்கங்களும்-இலங்கைச் சர்வ பொருட் காட்சிச் சபையாரா லளிக்கப் பட்டன!

மதிமோசம் உயிர் நாசம்—சென்ற ஞாயிற்றுக் கிழமை, கொழும்பி லிருந்து உத்தியோகம் மாறி யாழ்ப்பாணம் வந்த மெஸ் சி. மதியாபரணமென்பவர், பரந்தனில் இறங்கித் தம திஷ்டருடன் சம்பாசித்து விட்டு புகை வண்டி பிரயாண மான பின்பு சவனக் குறைவால் வண்டியேறிக் கைதவறிக் கீழே விழுந்து நசுங்கியிறந்தனர். மகா சமர்த்த ரென்று பிறர் மெச்சும் பொருட்டுப் புகைவண்டி பிரயாணமாகுஞ் சமயத்தி லோடிப் போ யேறும் வாலிபர்க் கோ ரெச்சரிக் கையாகும்!

சுதேச தின வர்த்தமானி— ஸ்ரீமான் கௌரவ பொ. இராமநாதன்துரையவர்களைத் தலைமையாய்க் கொண்ட இலங்கைப் பிரபுக்கள் பலர் கூடி யொருதின வர்த்தமானிப் பத்திரிகை நடத்த முன் வந் திருக் கின்றனர். இதற்கு மூல தனம் ௨ லட்ச ரூ.வாம். பங்கொன்று ஆயிரம் ரூ விதமாக ௨00 பங்கு சேர்க் கப்படு மாம்.

உத்தியோக மாற்றம்—யாழ்ப்பாணம் கச்சேரியில் ௨-ம் கிளாக்காக விருக்கும் மெஸ் ஆஸ்பரி யவர்கள் வேறிடத்திற்கு முதலாங் கிளாக்காக மாற்றப்பட முல்லைத்தீவுக் கச்சேரித் தலைமைக் கிளாக் மெஸ் வி. சின்னத்தம்பி முதலியாரவர்கள் யாழ்ப் பாணக் கச்சேரிக்கு வருகின்றார்கள்.

ஆட்களைப்பற்றியது. —பெரும்புகழ் வாய்ந்த அரசபிள்ளைவைத்தியரவர்கள்பௌத்திரனும்! பிரபலவைத்தியர் கனகசபைப்பிள்ளையின் புத்திரரும்; எமது நண்பரும், சண்முகநாதனிற் பேரபிமானியு மாகிய ஸ்ரீ. பொன்னுசாமிப்பிள்ளை தந்திப்பகுதி யின் ஸ்பெக்டராய் பயிற்றப் படுவோர்க்குவைத்தபரிசைஷயிற் சித்தியெய்திப் பயிற்றப்படுகிறுரென்று அறிந்துபேருவகை யெய்தினேம்.

—நமதுபத்திரிகையின் போஷகரி லொருவரும் பேரபிமானியு மாகிய ஸ்ரீ த. இளையதம்பியவர்கள் பத்திரிகை விருத்தியின் பொருட்டுச் சுற்றோட்டத்திற் புறப் பட் டிருக் கின்றுர்.

மகாராசபேட்டி—கொங் கொங் அன்ஷங்காய் வங்கிச் சிறுப்பரும், பிரபலபிரபுவுமாகிய ஸ்ரீ க. நவசிவாயம் ஜே. பி. அவர் கள். ஜுன் மீ ௧௩-ந் திகதி சென்ற் ஜேம்ஸ் ராச மாளிகையில் எங்கள் காருண்ணிய சக்கரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னரைத் தரிசித் துபசரிக்கப் பெற்றனர்.

எங்கள்தேசாதிபதியவர்கள்— எங்கள் தேசாதிபதியாகிய சேர்ஹென்றிமககலம் அவர்கள் பம்பாய்க் கவர்னராகப் போகிறதாக இந்தியபத்திரிகை கூறுகின்றன. அசற கேற்ப, தேசாதிபதியவர்களும் கொழும்பி லேஜூசங்கத்தில செய்தபிரசாரணத்தில்தாம்இன்னும்ஒருவருடத்தின்மேல் இவ்விலங்கையில் நிற்பதில்லை எனக்குறிப்பித்ததாக "இண்டிபெண்டன்ற்" பத்திரிகை கூறுகின்றது.

குடிவெறியும்படுகொலையும்—புலோலியிலேயுள்ளசாத்திராமசாமிபரியாரிகந்தர் என்னும கோவிருப்பம் அவரைச்சேர்ந்தோரும மலிவுசாராயம்பருகியகளிப்புப்பழங்கோபத்தை நினைப்பூட்டக்கத்திகிறிசுமுதலியஆயுதந்தாங்கி அவ்வூர்ப் பிரபுக்களிலொருவராகிய ஸ்ரீ சுப்பிரமணியத்தையுஞ் சுற்றத்தவரையுந்தாக்க, சுப்பிரமணியம்வெட்டுண்டுஉடனேயுயிர்துறக்க, அடுத்தநாட்களில் சாத்தியும் கந்தரும் இறந்தனராம். இன்னும்பலர்ஆபத்திலிருக்கின்றனர் இருபகுதியாரும் பலர்பிடிபட்டிருக்கின்றனர். சிதம்பரலிங்கபிள்ளை கதிரவேற்பிள்ளை என்னுமிருவர் சங்கேதகத்தின்பேரால்கொழும்பு முத்துவாரத்திலஆறுமுகமென்னும் பொலிசாற் பிடிக்கப்பட்டனர. விளக்கம்நடக்கின்றது.

வேலையாட்பிடித்துவிடும் ஏசண்டரொருவர் வெளிக்கடைக்குப் போனராம்—கே-வி- ரத்தினம் என்னும் ஓர் ஒருவேலையாள ஏசண்டர் ஐரோப்பிய துரைமனைவுப்பிய 15 ரூபாவைப பெற்றுக் கொண்டு வேலையாள் கொடுக்கத்தவறியதால் நம்பிக்கைமோசக்குற்றத்திற்காளாகி 100 ரூபா அபராதம் பெற்றுப் பணமிறுக்கவழியில்லாததால்வெளிக்ககடைச் சிறைச்சாலைக் கனுப்பப்பட்டார்.

—கொழும்பிலே மே மீ ௨௪ உ திங்கட்கிழமைபின்னேரம் றெயில்வேஸ்தானத்து முன்பாகமூரும் வண்டியோடிக்கொண்டிருக்கும் பொழுது திடீரெனத் தீ பற்றியதால்பிரயாணிகள்மிகப்பயந்தார்கள். உடனே கண்டக்டர்டோலி இழுத்து நெருப்பைத் தணித்தார்பிரயாணிகட்கபாயமில்லையென்றுலும் சைமன்கொம்பனியில் வேலை செய்யும் மிஸ் வைற் என்னும் மாது குதித்தவிடத்தில் கால்முறிந்து நடக்கமுடியாமல் பிச்சோலிலேயிப்போனுவாம், இவ்விதவிபத்துமுன்னும் வந்ததுண்டு.

வெள்ளைக்காரரிற்கிழிபினல் வழக்கு—நுவரெலியில் புக்கிங்கிளாக் மேஸ் ஸஸ்ரேக் என்பவரைக்கொழும்பிலுள்ளமெத்தப்பெரிய இருவெள்ளைக்காரர் சரீரதீங்குசெய்தார்களென்று நுவரெலிப்பொலிஸகோட்டில்வழக்குத்தொடரப்பட்டிருக்கின்றது.

பசித்தால் என்ன செய்ய லாம்—சிலேவ்ஐலெண்டில் ஒரு சிங்களமாதிடம் வேலையாயிருந்தசிறுவனொருவன் அம்மாதின்கொண்டையூசியொன்றைத் திருடியகுற்றத்தைக் கோட்டார் விசாரித்தபோது தனக்கு அதிக பசியிருந்ததால் அதை யெடுத்து வேறொர் பெண்ணிடம் 50 சதத்துக்குக்கொடுத்ததாகச் சொன்னுனும். இவனுக்குப் பிதாமாதா உண்டோ என்று விசாரிக்கத் தவணை போட்டி ருக்கிறது.

நான் அபின் சாப்பிடத் தான் வேணும்—கொழும்பிலே லைசன்ஸ் இல்லாதஒருவன் அபின் வைத்திருந்தானென்று பிடிபட்டுக் கோட்டுக்கு வந்தபொழுது. "நான் அபின்சாப்பிடத்தான்வேணும் அல்லாதிருந்தாற் செத்துப்போவேன்முன்னெருமுறைலைசென்ஸ்தரும்படி ஏஜண்டருக் கெழுதினேன் : ஏனேதெரியவில்லை அவர்எனக்குக்கொடுக்கவில்லை, என்னைப்போலவே வெகுபேர் வாங்கிச்சாப்பிடுகிறார்களே நானும்நெடுநாளாய்ச் சாப்பிட்டுவருகிறேன்" என்றுனும் 100ரூபாபிணையில் விட்டுத் தவணை போடப்பட்டிருக்கிறது.

லெவ்வை ஏறுவதற்கும்பணமா?—எட்டியாந்தோட்டையிலுள்ள ஒருமகமதியகுருவான லெவ்வை, யாரோசிலசோனகர் "எங்கள் லெவ்வைமார்" "எதிலேறினுலும் பணமில்லை" என்று புழுகியதைப் பலமுறை கேட்டிருந்த நம்பிக்கையினுல், எட்டியாந்தோட்டையிலிருந்து கொழும்புக்குத் துண்டில்லாமலே றையிலில் பிரயாணம் பண்ணிப் பிடிபட்டுப் பொலிஸ் கோட்டில் வந்தபோது நீகுற்றவாளியோ சுற்றவாளியோ" என நீதிமன்னன் கேட்க "என்னிடம் பணமில்லாதபடியாலும் சோனக ரெல்லாம் லெவ்வைமார் சும்மா ஏறலாம் என்றபடியாலும், நான் லெவ்வையா யிருப்பதாலும் சுற்றவாளி,, என்றனர். நீதிமான் குற்றவாளியெனக்கண்டு 10 ரூபா அவதாரம் விதித்தனர். அவர்கைவசம் நாலரைச் சதந்தான் இருந்ததாம்.

—எங்கள்தேசாதிபதியாகிய சேர்ஹென்றிமக்கலமவர்கள் கொழும்பிலிருந்துபுறப்பட்டு முதலிற் கீழ்மாகாணத்தமிழ்ப்பிரதானிகள்சபையிற்கொலுவிருந்தபின் புதானவடமாகாணம்வந்து கொழும்புசெல்லவிருப்பதா யறிகிறேம்.

—ஜான்பூர் சமிந்தாரின் புத்திரியைக் காசியிலுள்ள சிக்கோமிஷன் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சையின் பொருட்டனுப்ப அங்கேயுள்ள மிஸ் கிஃற. மிஸ் குப்தா என்னும் இருமிஷன்மாதரும் பிறருஞ்சேர்ந்து அப்பெண்ணைத் தம்மதப்படுகுழியில் வீழ்த்த முயலுவதையறிந்த அப் பெண்ணின் தாய்போய்ப் பெண்ணையழைக்க அவர்கள் தாயின்கையிலிருந்து அப்பெண்ணைப் பிடுங்கியது மல்லாமல் வந்தவர்களையுஞ் சருவினர்-கொண்டு வழக்காகிக் காசிகோட்டிலிருந்து அலகாபாத்து ஐக்கோட்டுக்கு வந்திருக்கிறது. நல்ல பழக்கத்திற் கென்று பெண்மணிகளை மிஷன் விடுதிகளுக்கனுப்பும் சைவத்தாய்மாரே, கண்டு கொள்ளுங்கள் .!!

கொள்ளைக்காரர் கொல்லப்பட்டார்—ஹைதராபாத்தில்—இரசக்காலனுக்குப் புறப்பட்ட மூன்று பொலீஸ் வீரர் 12 பேர் வரையிற் கூடிய ஒரு கூட்டம்களவாறெயில் வண்டியிலிருந்து தானியமூட்டைகளிறப்பத்துமூட்டைவரையில் அப்புறப்படுத்துவதைக்கண்டு கவனிக்கத் திருடர் அப்பொலிஸ் வீரர் மேற் கன்மாரி சொரியப் பொலிஸ் வீரர் துப்பாக்கியாற் சுட ஒருவன் உயிர் துறந்தனன்.

தக்கவைத்தியன்—வங்காளப் பகுதியிலேயுள்ள வைத்தியத்தெரிந்த ஒரு 20-வயதுப் பிராமண வாலிபன் சமீபத்தில் வசித்ததன் சுற்றத்தவர்களுக்குள் ஒருபாலிய விதவையோடு சிநேகமாயிருப்பதை யறிந்த அவன்மனைவி அதுசகியாதவளாய் அதனயிட்டு எப்பொழுதும் கலகம் விளைத்துவருவாள் ஒருநாள் அவன் மனைவி சமையல்செய்துவைத்துக் குழந்தையையும் வீட்டிலிருத்திவிட்டு மிகச் சமீபத்திலிருந்த சுற்றத்தார் வீட்டுக்குப் போயிருந்தாள் அத்தருணத்திற் பிராமணன் வீட்டிலேவந்து தானும் குழந்தையுமாக அங்கேயிருந்த உணவையுண்டு மிகுதியுணவை ஒரு கற்சட்டியிற்படைத்துத் தான்கற்றவைத்தியத்தின் பயனுகச் சிறிது பாஷாணத்தையுங் கலந்து வைத்துவிட்டான். சிறிதுநேரத்தால் மனைவிவந்து அப்போசனத்தை யுண்டவுடனே வாந்திபண்ணத்தொடங்கினுள். பிராமணன் ஓடித்தப்பிவிட்டான். சற்றுநேரத்துக்குள் கருப்பவதியாயிருந்த அம்மாது ஒரு இறந்தகுழந்தையைப்பிரசவித்து அன்றிரவு உயிர்துறந்தாள். பிராமணன்பிடிபட்டு விசாரணைசெய்தபொழுது யூரிமார் சுற்றவாளியெனச்சொல்லியும் நீதவான் மரணதண்டனை விதித்தார். மேல்கோட்டாருக் கபயஞ்செய்தவிடத்து அவன் வைத்தியன் மனைவியாதலால் தானுகவேதின்று தற்கொலைசெய்திருக்கவேண்டும். கண்டசாட்சியுமில்லையென்று மரணத்தண்டனை விலக்கப்பட்டது. ஆர்செய்தாலும் வைத்தியம் நல்லவைத்தியம்!!

* * *

பொய்ச் சாட்சிக்காரருக்கு எச்சரிப்பு—யாழ்ப்பாணப் பெரிய கோட்டில் சென்ற வெள்ளிக்கிழமை பொய்ச்சாட்சி சொன்ன தொல்புரம் விதானைக்கு டிஸ்திறிக்கு நீதிபதி 50 ரூபா அபராதம விதித்தார்.

ஒரு றயில்விபத்து—இம்மாதம் ௨௩-ந் தேதி டாட்மார்களிலமான் செஸ்டர் லிட்ஸ் றயில்வே தண்டவாளத்திலின்று தவறி விழுந்துவிட்டது. அதனுல் ௩-வண்டிகளுடைக்

து போயின; நால்வரிறந்தனர்; ஒருவர்காயமடைந்தனர்.

தைரிய சாலிகளான இரு வாலிபர்—மைமன்சிங்ஜில்லாவிலுள்ள சமீபத்திலுள்ளகாட்டிலே சிவிங்கியொன்று இருந்து பிரயாணிகளைவெருட்டியதைக்கேள்வியுற்-ஸ்ரீமான் சுரேந்த்ரநாத சக்கரவர்த்தி ஸ்ரீமான் அபிநாஷசந்திரராய் என்னு மிரு வாலிபர் வெகுசனங்களையுஞ்சேர்த்துக் கொண்டுதாங்களுமகையில்தண்டாயுதங்களுங்கொண்டு அச்சிவிங்கியண்டைசென்றனர். சிவிங்கிவேகத்தோடுபாய்ந்தொருமுசல்மானைக் கீழேவிழுத்திப் புரட்டியபோது சக்கிரவர்த்தி தைரியத்துடன் தண்டாயுதத்தால் அச்சிவிங்கியின்பின்புறத்திலடிதார, உடனேசிவிங்கி சக்கிரவர்த்திமேல்பாய சந்திரராய் ஒரேயடியாய் அதின்தலையிலடி நகச்சிவிங்கிவிழுந்திறந்தது. இருவருமாககாயமடைந்தமுசல்மானைக் காவிக்கொண்டு சென்று ஆஸ்பத்திரியிற் சிகிச்சை செய்தும் வாய்க்கவில்லை.

மிகப்பெரியகட்டடம் —இப்போதுஐரோப்பாவில் 750-அடியுயர முடைய ஒரு கட்டடம கட்டப்பட்டு வருகின்றது. இதன் பெயர் வூல்வொர்த்ஆம. இதுவே யுலகத்தில் உயரமுள்ள கட்டடங்களுள் மிகவுயர முடையதாம்.

ஐ என்னுமெழுத்து —சீனர்கள் ஐஎன்னுமெழுத்தை 145- வகையாக வுச்சரிக்கின்றனராம. ஒவ்வொருச்சரிப்பிற்கும் பொருட்பேத முண்டாம்.

மிகப்பெரியதொரு வானசாஸ்திர வாராய்ச்சிச்சாலை—அமெரிக்கா ஐக்கிய நாட்டைச் சேர்ந்தகொலராடோவிலுள்ள 14134 அடியுயர முடைய பைக்ஸ்மலையின் மீது கட்டப்பட்டுள்ள வானசாஸ்திர ஆராய்ச்சிச் சாலையே யுலகத்துள்ள வானசாஸ்திர ஆராச்சிச் சாலைகளுள் மிகப் பெரியதாம்.

ஆகாய விமானத்தின் விருத்தி—ஆகாயவிமானம் மேலே செல்லும்போது அது கீழே யிருப்பவர்களுக்குத் தெரியாதிருக்க. அதற்கோருவித வர்ணம் பூசும்முறை யிப்போது கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றது.

நிவர்த்திக்கொள்ளை—சென்ற சோமவாரத்தினம் இரவு 10 மணி சுமாருக்கு அங்கபூரைச் சேர்ந்த ஜாட்டூர் ரயில்வேஸ்டேஷன் உதவி ஸ்டேஷன் மாஸ்டருடைய வீட்டில் நிவர்த்திக் கொள்ளைக் கூட்டத்தினர் பிரவேசித்து 2000 ரூபாய் மதிப்புள்ள நகைகளைத் திருடிக் கொண்டதுமன்றி வீட்டிலுள்ளாரையும் காயப்படுத்திப் போயினர்.

இந்தியாவிலுள்ள ராணுவ வீரர்களின் தொகை— இப்போது இந்தியாவில் 3 18000 ராணுவ வீரர்களிருக்கின்றனர். இவர்களுள் இந்தியர்களின் தொகை 126000 ஆம்.

கடிதம்.

(கடிதக்காரர் அபிப்பிராயங்கட்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்)

நூதனவியாபாரம்.

(முற்பத்திரிகைத் தொடர்)

பூர்வோத்தர கிரியை வியாபாரம்.

நால்வருணத்துட்பட்டவராய், அகம்புறந்துய்மையுடையவராய்,வேதாகமபுராணநூல்களைநன் குணர்ந்தவராய், உள்ளோரேபக்குவமுள்ளசீடர்க்குப்புத்திமுத்தியுதவுந் தீக்ஷைமுதலியனசெய்யுமாசாரியராதற் குருராவர். ஈடரும் நால்வருணத் துட்பட்டகம்புறத்துய்மையுடையராவர். இங்ஙனமாக, பூர்வகிரியைகளைச் செய்யுமுரிமையுள்ள தக்கவாசாரியார்தற்செயலாய் அயலகலென்றிருப்பினும்,நோய் முதலியபிறதடையுற்றிருப்பினும், சீடர்க்குப் பக்குவமின்றென விடுத்திருப்பினும், அதுகண்ட ஆசாரியராதற்கருகரல்லார், பழிபாவங்கட்கஞ்சாது பொருளையே சதமென்றெண்ணிச்சீடர்க்கு வரலலராயினும், விலக்கியசாராயினும், நாலவருணத்துட்படாதாராயினும், ஆசௌசமுடையராயினும், குருவிதலிற் பணங்காய சமர்த்திய துபோல யாவர்க்குந் தீக்ஷையாதிகிரியைகளைச்செய்து தம்மையுஞ்சீடரையும் நரகத்துக்காளாக்கிப்பொருள் தேடியுஞ்சிலவேதாரணியத்துச்சைவகுருமாரிடமாயினும். வாரணிகரணகாயாதிகளிடத்தாயினும், சிலகாலஞ்சமையல முதலிய அனுக்கத்தொண்டேனும்,கட்டுப்பெட்டிசுமத்தல, வண்டியோட்டல, பிரேதந் தாங்கல முதலிய புறத்தொண்டேனும் செய்த அவ்வுரிமையொன்றையுமே பற்றுக்கோடாக்கொண்டு, முறையே அனுக்கத்தொண்டன் மூன்று நான்குவருடத்தனனும், புறத்தொண்டன் பின்னுஞ்சிலகாலங்கழித்தும், ஒருகையிற்குடையென்றும், மறு கையிற்பிரம்பென்றும், காலிலே கட்டையென்றும், தலையிலே மொட்டையென்றும, அதன்மேல் டப்பாத்தலை உறுமாலென்றும், விபூதிபை சம்புடமென்றும், பின்னுக்கொருதவசிப்பிள்ளையென்றும்,அவன் தலையிற்கட்டுப்பெட்டி யென்றும், பிறவென்றும் சோடித்துக்கொண்டு வெருடபடலாய் வாணிவேதாரணியத்துக்குருமார் எப்படியோ அவர்களிலும் இரண்டுபங்குமேலாகவேபுறப்பட்டு, என்னசாதியோ! என்னசமயமோ! என்னவியாதியோ! என்னமரணமோ!? என்பதொன்றும்பாராது, சவம் விழுந்துவிட்டால், போதும். சவத்தின் முன்பு போயிருந்து சிலகும்பங்களும்வைத்துத்திருப்பொற்சுண்ணம் இருபதும்படித்துச் சவத்துக்கு பஞ்சட்பொட்டிடுவித்துவிட ரூபாசம் மண்டபச் சாமானும், மயானத்தும் ஏதாவது செய்வதென்றால் அதற்கு வேறாக ஒரு ரூபாவும் சுடலைச்சாமானும்பெற்றும் அந்தியேட்டியைத் தீர்த்தக்கரையிலேதான் செய்யவேண்டுமென்று மூன்று மாசத்தவணைபோட்டு வேறும் பலவிடங்களிலிருந்தும் பலசாதியாரிடத்திருந்தும் வருகிற முப்பது அந்தியேட்டி வரையிற்சேர்த்து மூன்றுநாளைக்கு முன்னிறந்தவர்களுக்கும் அந்த மூன்றுமாசக்காரரோடுதானே செய்யநினைத்து "இங்கே பார்க்கிறதுதானே தம்பி நாம் இப்ப அந்தியேட்டியைச்செய்துபோடுகிறது வசதி முப்பத்தொன்றுக்கு ஆசௌசத்தைக்கழித்துவீட்டுக்கிருந் தியங்களை செய்கிறது, நமக்கும் இப்பசெய்கிறது செலவும் சுருக்கமல்லவோ" என்றுபதேசம் பண்ணி எல்லாரையும் சாய்த்துக்கொண்டு தீர்த்தக்கரையடைந்து இதற்குமுன்னும் பலஅந்தியேட்டிகண்டு பழகியனவாகிய பச்சரிசி நெல் தேங்காய் பயறுமுந்து கும்பவஸ்திரங்களைப்பரப்பிக் கஞ்சிவார்க்கப் பறையலரயிருத்தியதுபோல யாவரையும் நிரைபடவிருத்திச்செய்யத்தெரிந்தன செய்து பொற்சுண்ணமிடிக்கத் தொடங்கி யுலக்கையிற் பிடிக்கு மிடம் எத்தனைகைக்கு உண்டோ! அத்தனைகையுமுலக்கைபிடிக்க ஒழிந்தோர் தம்வலக்கையால் உலக்கைபிடித்தோரது இடக்கைபற்ற வேறும் பலருண்டாயின் கைபிடித்தோரது கையைப்பிடிக்க ஒருவாறு சுண்ணமுமிடித்துத் தர்ப்பையுங்கருக்கி முப்பதுபேருக்கும் முப்பது உடைந்த ஓடுகைவிற்கொடுத்து சிதாஸ்தானத்திலுள்ள சாம்பரைமுதலிலனும் மூவரள்ளிக்கொள்ள ஒழிந்தோரெல்லாம் மண்ணையேவாரிக்கடலிற்கொட்டி முழுகிவிட்டு வந்து அவித்துக் கொடுகுங்காசு மூட்டையைப்பெற்றும் வயிறுவளர்ப்பதாகிய இதுதான் பூர்வோத்தர கிரியை வியாபாரம். நண்பர்கள் அறிய வேண்டுமாயின் ஆடியமாவாசி யன்று தீர்த்தக்கரையிற் காணலாம்.

சிவவேட வியாபாரம்.

